# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.109/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தினேஷ் | Father's Name | : | பாஸ்கரன் |
| Village | : | பெருமாளகரம் | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 36 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 17th day of December 2025.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாளகரத்தில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரீஷியன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் தம்பி மனைவி. அ.சா.2 என் தந்தை. ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு விஜய் என்ற சகோதரர் உள்ளார். என் வீட்டிற்கு பக்கத்தில் என் சகோதரர் விஜய் என் தகப்பனாருடன் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறார். 03.10.2018 ம் தேதி நான் வீட்டிலிருந்தபோது எதிரிகள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து என் சகோதரர் விஜய் எங்கே என கேட்டார்கள். அப்போது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.17 14:55:26 +0530

இரவு 10.30 மணியிருக்கும். நான் விஜய் வீட்டிற்கு வந்தபோது அங்கே கூட்டமாக இருந்தார்கள். வந்தவர்களில் ஒருவர் அருவாளால் என்னை தலையில் வெட்டினார். என்னை வெட்டியவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகள் அல்ல. அன்றைய தினம் என்னை குமாரனும் வெங்கடேசும் மருத்துவமனையில் சேர்த்தார்கள். மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழுங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் என் தம்பி விஜய் மன்னார்குடி போலீசில் திருட்டு கேசில் பிடிபட்டு 9 நாட்களுக்கு முன்பு ஜாமீனில் வெளியில் எடுத்தேன் எனவும் 03.10.2018 ம் தேதி இரவு 10.30 மணியளவில் முத்துக்குமாரும் அவனது நண்பரும் விஜய் வீட்டிற்கு சென்று விஜய் எங்கே என்று அவரது மனைவி மகாலெட்சுமியிடம் கேட்டுள்ளார்கள் அதற்கு மகாலெட்சுமி விஜய் இன்னும் வரவில்லை என சொல்லியுள்ளார் உடனே அவர்கள் இருவரும் விஜயை மறைத்து வைத்துக்கொண்டு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.17 14:55:34 +0530

பொய் சொல்கிறீர்களா குச்சிகாரி, தேவடியா மகனே அவனை வெளியே அனுப்புங்கடி என சத்தம் போடவும் அங்கிருந்த என் மனைவி தீபிகா போன் மூலம் எனக்கு தகவல் தெரிவிக்க நான் உடனே விஜய் வீட்டிற்கு வந்தவுடன் அங்கிருந்த எதிரிகள் இருவரிடமும் எதற்கு தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் எதுவாயிருந்தாலும் விஜய் வந்தவுடன் பேசிக் கொள்ளலாம் என சொன்னதற்கு முத்துக்குமாரும் அவருடன் வந்தவரும் விஜயை மறைத்து வைத்துக்கொண்டு பொய் சொல்கிறாயா குச்சிகாரி, தேவடியா மகனே உன்னை ஒரு வழி செய்தால்தான் சரியா வரும் என சொல்லி முத்துகுமார் அவர் வந்த மோட்டார் சைக்கிளிலிருந்து அருவாளை எடுத்துவந்து இதோடு தொலைந்துபோடா என சொல்லிக்கொண்டே என் தலையில் வெட்டினார் எனவும் அவர் வெட்டியதில் என் தலையிலிருந்து இரத்தம் ஊற்றியது எனவும் மறுபடியும் அவர் வெட்ட நான் இடது கையால் அருவாளை பிடிக்க என் இடது கை கட்டை விரலில் அந்த வெட்டு விழுந்தது எனவும் நான் அருவாளை பிடித்துக்கொள்ள முத்துக்குமாருடன் வந்த சின்னபிள்ளை பீர் பாட்டிலால் என் தலை, வலது தோள் பட்டை, வலது கை மணிக்கட்டில் அடித்தான் எனவும் அதனால் எனக்கு இரத்தக் காயம் ஏற்பட்டு நான் கீழே விழவே எனது மனைவி தீபிகா, மகாலெட்சுமி ஆகியோர் சத்தம் போடவே வெங்கடேசனும் என் அப்பா

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.17 14:55:40 +0530

பாஸ்கரனும் ஓடிவந்தார்கள் எனவும் எதிரிகள் இருவரும் என்னைக்கிருந்தாலும் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என சொல்லி கையில் வைத்திருந்த அருவாளையும் பீர் பாட்டிலையும் காட்டி மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள் எனவும் குமரன் என்னை மருத்துவமனையில் கொண்டுவந்து சேர்த்தார் எனவும் போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் எனவும் சொன்னால் தவறு. நாங்கள் சமாதானமாக போய்விட்டதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக நடந்த சம்பவத்தை மறைத்து தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.1 யை போலீசார் தயார் செய்து வைத்திருந்ததில் நான் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, போலீசாரும் என்னிடம் படித்துக் காட்டவில்லை என்றால் ஆமாம்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.17 14:55:47 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.109/2025

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தீபிகா | Husband's Name | : | தினேஷ் |
| Village | : | பெருமாளகரம் | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 26 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 17th day of December 2025.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாளகரத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். அ.சா.1 என் ஓப்படியார். அ.சா.2 என் மாமனார். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய கொழுந்தனார் பெயர் விஜய். என் வீட்டிற்கு பக்கத்தில் என் கொழுந்தனார் விஜய் அவரது தகப்பனாருடன் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறார். 03.10.2018 ம் தேதி நான் வீட்டிலிருந்தபோது எதிரிகள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து என் கொழுந்தனார் விஜய் எங்கே என கேட்டார்கள். அப்போது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.17 14:55:53 +0530

இரவு 10.30 மணியிருக்கும். நான் என் கொழுந்தனார் வீட்டில் இருந்தபோது வந்தவர்களில் ஒருவர் என் கணவரின் தலையில் அருவாளால் வெட்டினார். என் கணவரை வெட்டியவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகள் அல்ல. அன்றைய தினம் என் கணவரை அங்குள்ளவர்கள் மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் என் கொழுந்தனார் விஜய் மன்னார்குடி போலீசில் திருட்டு கேசில் பிடிபட்டு 9 நாட்களுக்கு முன்பு ஜாமீனில் வெளியில் வந்தார் எனவும் 03.10.2018 ம் தேதி இரவு 10.30 மணியளவில் முத்துக்குமாரும் அவனது நண்பரும் விஜய் வீட்டிற்கு சென்று விஜய் எங்கே என்று அவரது மனைவி மகாலெட்சுமியிடம் கேட்டுள்ளார்கள் அதற்கு மகாலெட்சுமி விஜய் இன்னும் வரவில்லை என சொல்லியுள்ளார் உடனே அவர்கள் இருவரும் விஜயை மறைத்து வைத்துக்கொண்டு பொய் சொல்கிறீர்களா குச்சிகாரி, தேவடியா மகனே அவனை வெளியே அனுப்புங்கடி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.17 14:55:59 +0530

என சத்தம் போடவும் அங்கிருந்த நான் போன் மூலம் என் கணவருக்கு தகவல் தெரிவிக்க என் கணவர் உடனே விஜய் வீட்டிற்கு வந்தவுடன் அங்கிருந்த எதிரிகள் இருவரிடமும் எதற்கு தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் எதுவாயிருந்தாலும் விஜய் வந்தவுடன் பேசிக் கொள்ளலாம் என சொன்னதற்கு முத்துக்குமாரும் அவருடன் வந்தவரும் விஜயை மறைத்து வைத்துக்கொண்டு பொய் சொல்கிறாயா குச்சிகாரி, தேவடியா மகனே உன்னை ஒரு வழி செய்தால்தான் சரியா வரும் என சொல்லி முத்துகுமார் அவர் வந்த மோட்டார் சைக்கிளிலிருந்து அருவாளை எடுத்துவந்து இதோடு தொலைந்துபோடா என சொல்லிக்கொண்டே என் கணவரின் தலையில் வெட்டினார் எனவும் அவர் வெட்டியதில் என் கணவரின் தலையிலிருந்து இரத்தம் ஊற்றியது எனவும் மறுபடியும் அவர் வெட்ட என் கணவர் இடது கையால் அருவாளை பிடிக்க அவரது இடது கை கட்டை விரலில் அந்த வெட்டு விழுந்தது எனவும் என் கணவர் அருவாளை பிடித்துக்கொள்ள முத்துக்குமாருடன் வந்த சின்னபிள்ளை பீர் பாட்டிலால் என் கணவரின் தலை, வலது தோள் பட்டை, வலது கை மணிக்கட்டில் அடித்தான் எனவும் அதனால் என் கணவருக்கு இரத்தக் காயம் ஏற்பட்டு கீழே விழவே நானும், மகாலெட்சுமியும் சத்தம் போடவே வெங்கடேசனும் என் மாமனார் பாஸ்கரனும்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.17 14:56:06 +0530

ஓடிவந்தார்கள் எனவும் எதிரிகள் இருவரும் என்னைக்கிருந்தாலும் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என சொல்லி கையில் வைத்திருந்த அருவாளையும் பீர் பாட்டிலையும் காட்டி மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள் எனவும் குமரன் என் கணவரை மருத்துவமனையில் கொண்டுவந்து சேர்த்தார் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. நாங்கள் சமாதானமாக போய்விட்டதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக நடந்த சம்பவத்தை மறைத்து தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.17 14:56:13 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.